தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்


மரம் 14 டிசம்பர் 2013 கனி 1



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Dec. 2013

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர் களைகள்
பொல்லாங்கனுடைய புத்திரர் - மத்தேயு 13:38


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



சகோ. கிறிஸ்டி குமார் தன்னுடைய பிள்ளைகளோடு மற்றும் ஜெர்ரி பவுலா

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



### Arjunan in Tamil on Tamilan TV & Radio:
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

### Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

### P.R.Swamy & Douglas in Tamil on Radio:
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

### P.K.Varghese in Malayalam on TV:
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

### Philemon & Kingsley in Tamil on Tamilan TV:
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

### Rajanayagam in Tamil on Tamilan TV:
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

### Sunny, Francis & Vinay David in Hindi on TV:
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழ்





**Editor:**
**B.ARJUNAN**



**Associate Editor:**
**S.Reagan**

**Associate Editor:**
**A.Kanagaraj**


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 160

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள்; இவைகளெல்லாம் எவர் வெறுக்கிற காரியங்கள்?
2. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய பிரதான ஆசாரியர் யார்?
3. இப்போதும் தேவனுடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சுங்கள் அப்பொழுது நம்மேல் இரங்குவார் என்று சொன்ன தீர்க்கன் யார்?
4. கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. தேவன் எவனையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள் என்றார்?
6. கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. பரிசுத்த ஸ்தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலைகளையும் செய்ய அறியும்படிக்குக் கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ள இருவர் யார்?
8. இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும், உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் என்ன செய்யப்படவேண்டும்?
10. பாவஞ்செய்கிற எவனும் எப்பிரமாணத்தை மீறுகிறான்?

## மாரா Marah

- இஸ்ரவேலர்கள் மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதற்கு மாரா என்று பேரிட்டார்கள் - யாத்.15:23
- மோசே ஒரு மரத்தை வெட்டிப்போட்டு அதை மதுரமான தண்ணீராக்கினான் - யாத்.15:25
- இஸ்ரவேலர்கள் சூர்வனாந்தரத்தில் மூன்று நாள் தண்ணீர் கிடையாமல் நடந்து மாராவை அடைந்தார்கள் - யாத்.15:22
- இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த பின் கண்ட முதல் நீரூற்று இது - யாத்.15:23
- இஸ்ரவேலர் மூன்று நாள் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணி மாராவிலே பாளையமிறங்கினார்கள் - எண்.33:8



சிறுவர் பகுதி

## "எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ"

வேத பகுதி: மாற்கு 11:21-24



நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவானவர் தனது சுவிசேஷப் பயணங்களின்போது; வேத கட்டளைகளை போதிக்க பல உவமைகளை கையாண்டிருக்கிறார். அப்படி ஒரு முறை பேதுரு பட்டுப்போன அத்திரமரத்தை காட்டி கேட்டபோது, கிறிஸ்துவானவர் அவனுக்குச் சொன்ன பதில்: நம் தலைப்பில் அடங்கியிருக்கிறது. அதாவது மாற்கு 11:21-24 வரை வாசிப்போமானால் அதிலும் குறிப்பாக 24-ம் வசனம் வாசிப்போமானால்; அதில் இயேசு "எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். கேட்டுக்கொள்வீர்களோ என்று ஆண்டவர் சொல்வது நாம் ஜெபத்தில் கேட்பது பற்றிக்கூறுகிறார்.

புரியாதவர்கள் இந்தவார்த்தையை தவறாக புரிந்துகொள்ளுகின்றனர். ஒரு பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்தது; அதில் ஒரு கணவனும் மனைவியும் ஏறினார்கள். அந்த பஸ்ஸில் உட்கார இடம் கிடைக்காததினால் பஸ்ஸின் முன் பகுதியில் அவருடைய மனைவியும் பின்பகுதியில் கணவரும் ஏறிக்கொண்டார்கள். கண்டக்டர் முன் உட்கார்ந்த அந்தப் பெண்ணிடம் டிக்கட் வாங்கும்படி சொன்னார். அதற்கு அந்த பெண் பின்னால் மீசை வைத்துகொண்டிருப்பார் அவரிடம் போய் கேளுங்க என்று கூறினாள். அவரும்போய் தேடி சிறிது நேரம் கழித்து கண்டக்டர் அந்த பெண்ணிடம் திரும்பி வந்து ஏம்மா எல்லாரும் முன்னால்தான் (முகத்தில்) மீசை வைத்துக்கொண்டிருப்பாங்க யாரும் பின்னால் மீசை வைத்திருக்க மாட்டாங்க, டிக்கட் வாங்குமா என்று கூறினார்.

தம்பி தங்கைகளே புரிகிறதா! ஒரே வார்த்தையை எப்படி புரிந்து கொள்கிறார்கள் என்று, இப்படித்தான் இன்றைக்கு அநேகர் பலவிதமாய் வேதவசனங்களைப் புரிந்துகொண்டு தான்தோன்றித்தனமாக போதித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஜெப விண்ணப்பங்களை யாருடைய பாதத்தில் வைத்து, யார் மூலமாக பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற உண்மை தெரியாமல் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் விண்ணப்பங்களை பிதாவின் பாதத்தில் வைத்து இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் கேட்கும் அல்லது படிக்கும் வசனங்கள், யார், யாரிடம் சொன்னது, எதற்காக எந்த சூழ்நிலையில் ஏன் சொல்லப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். வசனங்களை பகுத்தறியுங்கள் என்று வேதம் வலியுறுத்துகிறது. அப்படி நாம் வசனங்களை பகுத்தறியாவிட்டால் அந்த பஸ் கண்டக்டர் போலவே, பின்பக்கத்தலையில் இல்லாத மீசையை தேடிக்கொண்டிருக்கவேண்டியதுதான்.

வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள் அதன்படி நடக்க பிரயாசப்படுங்கள். தேவன் கிறிஸ்துவின் மூலம் நம் அனைவரையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக! அடுத்த இதழில் சந்திப்போம்.

**- உங்கள் சுகுமார் - 81480 90856.**

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" - யோவான் 5:39



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 டிசம்பர்-2013 கனி - 1

ஆசிரியருரை

## ஞானம் மற்றும் புத்தி
## Wisdom and Understanding




ஒவ்வொரு மனிதனுக்கும் ஞானமும் புத்தியும் மிகவும் அவசியம். இவைகள் எங்களுக்கு வேண்டாம் என்று ஒருவன் சொல்வானேயாகில் அவன் மதிகெட்டவனா யிருப்பான். இவைகள் எங்கே கிடைக்கும்? அது விளைகிற இடம் எது? அதனுடைய வழியை யார் அறிவார்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறது அல்லவா, இதற்கான பதிலை நாம் வேதாகமத்தின் துணைகொண்டு அறியலாம். யோபு என்ற தேவனுடைய தாசன் தன்னுடைய பிரசங்க வாக்கியத்தில் சொல்கிறார்; "ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே?" (யோபு28:12). இன்றைக்கு மனிதன் எதை எதையோ கண்டுபிடிக்கிறான், அவைகளை ஆராய்ந்து கண்டுகொள்கிறான், ஆனால் ஞானத்தை எங்கே கண்டெடுக்கிறான். அது கடையில் விற்கப்படும் ஒரு பொருளா? அப்படி கடையில் விற்கப்படும் பொருளாயிருந்தால் அநேகர் வாங்கி பயனடைந்திருப்பாகள். ஏனெனில் அதற்கு என்ன விலை என்பதும் மனுஷனுக்குத் தெரியாது. "அதின்விலை மனுஷனுக்குத் தெரியாது; அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை" (யோபு28:13). பின்பு எங்கே தான் இருக்கிறது என்ற கேள்வி எழும்புகிறது அல்லவா! தொடந்து தியானிப்போம்.

சாலொமோன் என்ற ராஜாவை தெரியாதவர்கள் இருக்க வாய்ப்பில்லை என்று எண்ணுகிறேன். அவன் தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாகும்போது; அவன் கர்த்தரை நோக்கி; "நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமதுஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்" (1இரா.3:7-9). சாலொமோன் பொன்னையும், பொருட்களையும்

கேட்காமல், ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான். அவரிடமே அவைகள் இருக்கிறபடியால் பிதாவாகிய தேவனை நோக்கி கேட்டான். நீங்களாக இருந்திருந்தால் என்ன கேட்டிருப்பீர்கள் என்பதை இங்கே யோசித்துப்பாருங்கள். பொதுவாக ராஜ சிம்மாசனத்தில் உட்கார்ந்தவுடன் கர்வம் வந்துவிடும். நாட்டைபிடிக்கவேண்டும், சுகபோகமாக வாழவேண்டும், தனக்கானவைகளை நாடவேண்டும் என்றும் நினைப்பார்கள். ஆனால் சாலொமோனோ ஞானமுள்ள இருதயத்தை கர்த்தரிடம் கேட்டான். அவனுடைய கோரிக்கையை கர்த்தர் நிறைவேற்றி அவனுக்கு ஞானமுள்ள இருதயத்தைக் கொடுத்தார். அவனைப்போல ஞானத்தைப்பெற்ற ஒருவனும் அவனுக்குப் பின்பு எழும்பினதில்லை. அப்படிப்பட்ட ஞானத்தை அவனுக்குக் கர்த்தர் கொடுத்தார். அவனுடைய ஞானத்தை கண்டடைய அநேகர் அவனை நோக்கி வந்தார்கள். அவனுடைய ஞானத்தை பரிசோதித்து பார்த்து அவர்கள் கேள்விபட்ட ஞானத்தைக் காட்டிலும் அவனுக்கு அதிகமாக கர்த்தர் கொடுத்திருப்பதைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஸ்திரப்படுத்தினார்.

"புத்தி விளைகிற இடம் எது?" என்று யோபு28:12-ல் படிக்கிறோம். அதை அறிந்தவன் யார்? தங்கம் விளைகிற இடத்தை மனுஷன் கண்டு கொள்கிறான். வெள்ளியை கண்டு கொள்ளுகிறான். இன்னும் இப்படி எத்தனையோ காரியங்களை அடையாளம் கண்டுகொள்கிறான். ஆனால் புத்தி விளையக்கூடிய இடத்தை அவனால் கண்டுகொள்ளமுடியவில்லை. ஏனெனில்; யோபு சொல்கிறார்; "அது ஒரு பட்சிக்கும் தெரியாது; வல்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை" (யோபு28:7). யாருடைய கண்களுக்கு வேண்டுமானாலும் தப்பிக்கொள்ளலாம் ஆனால் வல்லூறின் கண்களுக்குத் தப்பிக்கொள்ளமுடியுமா? முடியாதே. வானத்தின் உயரத்திலிருந்து இரையை பார்த்து சடுதியில் இறங்கி கவ்விக்கொள்ளும். அதனுடைய கண்களும் அவைகளைப் பார்த்ததில்லை. அது விலையேறப்பெற்றது. அதை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு அது விற்கப்படுவதுமில்லை. அதனுடைய விலையை சொல்லால் சொல்லவேண்டுமானால்; "முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல" (நீதி.3:15). இவ்வளவு விலையேறப்பெற்ற புத்தியை பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டுவதென்ன? சங்கீதக்காரன் சொல்கிறான்; "உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்" (சங்.119:104). முதலாவது எல்லாபொய்வழிகளையும் வெறுக்கவேண்டும். அப்பொழுது புத்தியை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்வீர்கள். அது எப்படிமுடியும். என்னுடைய மூதாதையர் வழிகளை விட்டு விட்டு புதிய வழி செல்வதா, முன்பின் அறியாத ஒரு வழியில் நடப்பதா? என்ற கேள்வி எழும்பி உங்களை குழப்பத்திற்குள் ஆளாக்கிவிடும். மேலும் இவ்வளவு காலம் நான் வந்த



வந்தோமோ அத்தனை ஆண்டுகளும் வீணாய் போனது. உன் விசுவாசம், நம்பிக்கை முயற்சிகள் மற்றும் உன் தெய்வபயம் எல்லாம் வீண். நாம் மனிதனை பிரியப்படுத்துகிறோம், ஆனால் தேவனை பிரியப்படுத்த தவறிவிட்டோம். பரவாயில்லை அதை சரிபடுத்த நாம் என்ன செய்யவேண்டும்.

2தீமோ.4:3-ல் "ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு" இன்று வாழக்கூடிய கிறிஸ்தவர்கள் இந்த வசனத்தின்படி தான் தேவனை மகிமைப்படுத்தியும், தொழுது கொண்டும் இருக்கிறார்கள். இவர்கள் செய்யக்கூடிய ஆராதனை வீணானது என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு சொல்லுகிறது.

இன்று அநேக மார்க்கப்பிரிவினை போதகர்கள் தங்கள் சபைகளில் அவர்களுடைய கற்பனைகளை கதைகளாக, உபதேசங்களாகப் போதிக்கிறார்கள், சில சபைகளில் கட்டளைகளாகவும் அவை செயல்படுத்தப்படுகிறது. அநேக மார்க்கப்பிரிவினை போதகர்கள் நம்மை பாவத்திலிருந்து இரட்சித்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை மறைத்து, அவருடைய கற்பனைகளை மறைத்து, இவர்களுடைய சொந்தக்கதைகளையும் சோகக் கதைகளையும் வெளிநாட்டு பிரயாணங்களையும், மனிதனுக்கு பிரியமான கதைகளையும் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் பார்க்கும்போது பிலாத்துவும் மக்களை பிரியப்படுத்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை கை கழுவினான்.

2யோவா9-ல் 'கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" இவ்வசனத்தை சிந்தித்தும் கவனித்தும் கைக்கொள்ளாதே போகிறார்கள். 2தீமோ.2:5-ல் "மேலும் ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான்" எனவே நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு வேத வசனத்தின் மூலம் கொடுக்கும் புத்தியுள்ள ஆலோசனைகளை கவனியுங்கள்.

**1. 2தீமோ.3:5 - தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்கள் "விட்டு விலகு".**

**2. 1தீமோ.6:5 - மனிதரால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களுக்கு "விட்டு விலகு".**

**3. 2தீமோ.2:16 -வீண் பேச்சுக்கு "விலகியிரு".**

**4. 1தீமோ.4:17 - தேவ பக்திக்கேதுவாக "முயற்சி பண்ணு".**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாமல், மனிதனுடைய கற்பனைகளுக்கும் உபதேசங்களுக்கும் செவியை சாய்க்காமல் அவைகளுக்கு விலகி, கிறிஸ்துவினுடைய கற்பனைகளுக்கும், உபதேசங்களுக்கும் நம்முடைய செவியை சாய்ப்போம். 2தீமோ.2:7-ல் "நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்:" ஆகவே கர்த்தர் எல்லாவற்றிலும் நமக்கு புத்தியைத் தந்தருளுவார். எனவே நாம் வேதவசனங்களை வாசித்து உணர்ந்து சத்தியத்திற்கு உண்மையாய் நம்முடைய செவியைசாய்த்து, மனிதனுடைய கட்டுக்கதைகளுக்கும் விலகி தேவனுடைய நீதியை நிறைவேற்றுவோம்.

# சத்தியத்திற்கு செவியை விலக்கி
## Away From the Truth

S.I.Reagan
Associate Editor



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என்னை இந்த இதழின் துணை ஆசிரியராக தேர்வு செய்த சகோதரர் அவர்களுக்கும் கிறிஸ்துவின் மூலம் நன்றி. என்பணி தொடர வாசகர்களாகிய உங்கள் ஜெபத்தை நாடுகிறேன்.

இந்த தலைப்பு உங்களுக்கு பெரிய சந்தேகத்தை உண்டாக்கலாம். ஆனால் நம்மில் அநேக கிறிஸ்துவர்கள் மற்ற மனிதர்களின் பார்வைக்கு மட்டும் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்களே தவிர, பிதாவுக்கும், கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களாக இருப்பதில்லை. அவருடைய வசனத்தின்படியேயும் நடப்பதுமில்லை. காரணம் நம்மில் அநேகர் இயேசுகிறிஸ்துவினுடைய சத்திய வசனத்துக்கு செவி கொடுப்பதைக் காட்டிலும், மனிதனுடைய கற்பனை மற்றும் கட்டுக்கதைகளுக்கு அதிகமாக செவிசாய்க்கிறார்கள்.

அப்.பவுல் வேதத்தில் குறிப்பிடுகிறார், 2தீமோ.3:1-ல் "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக" நாம் அறிய வேண்டியகாலம் ஒன்று உண்டு. அது கொடிய காலம் என்று கூறுகிறார்.

அந்தக் கொடிய காலம் எது?

2தீமோ.4:4-ல் சத்தித்திற்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும். இந்த காலம் தான் அந்த கொடிய காலம். அந்த காலம் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இன்று சிலர் அல்ல அநேக பெயர் கிறிஸ்தவர்கள் தங்கள் செவியை சாய்ப்பது கட்டுக்கதைகளுக்குதான். அந்த கொடிய காலம் எப்பொழுதோ வந்து பிரிவினை சபையின் ஆத்துமாக்களை ஆளுகை செய்துகொண்டிருக்கிறது.

கட்டுக் கதைகள் என்றால் என்ன?

மத்.15:9-ல் "மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப்போதித்து" என வாசிக்கிறோம். இன்று அநேக மார்க்க பிரிவினை சபைகளில் மனிதனுடைய கற்பனைகளை, கட்டுக் கதைகளாக போதித்தும், உபதேசித்தும் செயல்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்திலுள்ள கற்பனைகளையோ, உபதேசங்களையோ அவர்கள் போதிப்பதில்லை, உணர்த்துவதுமில்லை. வேதாகமத்தைக் காட்டிலும் இப்போதகர்களுடைய கற்பனைக் கட்டுக்கதைகள் தான் இக்கால கட்டத்தில் மேலோங்கி உள்ளது. வேதத்திலுள்ள கற்பனைகளுக்கும், உபதேசங்களுக்கும் செவிசாய்க்கிற நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? என்ன செய்ய வேண்டும்?

மத் 15:9-ல் "தேவனுக்கு வீணாய் ஆராதனை செய்கிறார்கள்" மனிதனுடைய கற்பனையின்படி நாம் தேவனுக்கு செய்வதெல்லாம் வீணானது, மனிதனுடைய கற்பனையின்படி எத்தனை ஆண்டுகள் தேவனை தொழுதும் ஆராதித்தும்



வழி தவறான வழியா, ஐயோ, நான் என்னசெய்வேன்? என்னை யார் மெய்யான வழியில் வழிநடத்துவார்கள் என்ற ஏக்கம் உங்களுக்கு ஏற்படும். நீங்கள் கலங்கவேண்டிய அவசியம் இல்லை. உங்களை நேசிக்கும் பிதாவாகிய தேவன் ஒரே ஒரு வழியை மட்டுமே ஏற்படுத்தியுள்ளார். அது ஜீவனுக்குப் போகும் வழி. அந்த வழியைக்குறித்து ஆண்டவர் இயேசு குறிப்பிடும்போது "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரான் என்றார்" இந்த ஜீவவழியை கண்டுகொள்ளுங்கள். அப்பொழுது புத்தியடைவீர்கள். சிலர் வழி மாறிசென்றுவிட்டு பின்பு யோசிப்பார்கள். புத்தியில்லாமல் இந்த வழியில் வந்துவிட்டேன் என்று. அதைபோல உங்களுடைய வாழ்க்கையை வீணாக்கிவிடாதீர்கள். ஞானத்தையும் புத்தியையும் தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த இரண்டு வழிகளையும் கர்த்தர் அறிவார் என்கிறார் யோபு. "தேவனோ அதின் வழியை அறிவார், அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும்" (யோபு28:23). உங்களுக்கும் எனக்கும் சில காரியங்களை கர்த்தர் மறைத்து வைத்திருக்கிறார். அவைகளை நலமென்று நமக்கு மறைத்துவைத்திருக்கிறார். ஆகையால், "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தபட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா.29:29). தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு சமீபம். ஆனால் அவருடைய ஞானத்திற்கும் மனிதனுடைய அறிவுக்கும் வெகுதூரம். "அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின் கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்" என்கிறார் (யோபு28:24). மேலும் சாலொமோன் குறிப்பிடும்போது; "கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்" என்கிறார் (நீதி.3:19). இதைப்போல செய்ய மனுஷனால் முடியுமா? அவரால் உண்டாக்கப்பட்ட பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். உருண்டையான பந்துபோன்ற மேற்பரப்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஈக்களைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவர் இந்த பூமியை உலுக்கினால் என்னவாவோம் என்று நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. அவருடைய கரத்தின் கீழாக அனைத்தும் செயல்படுகிறது. பொதுவாக நாம் என்ன சொல்கிறோம் "முதியோரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே. அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத்தான் ஆலோசனையும் புத்தியும் உண்டு. இதோ, அவர் இடித்தால் கட்ட முடியாது; அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்கமுடியாது" (யோபு12:12-14). அன்பானவர்களே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் வல்லமையில் மகத்துவமானவர். அவர் ஒருவரே ஞானத்தில்

சிறந்தவர். நாமெல்லாம் மண்ணாயிருக்கிறோம். மண்ணிலிருந்து எடுக்கப்பட்டோம் மண்ணுக்குத் திரும்புவோம். நாம் மண்ணாயிருக்கிறோம் என்பதை கர்த்தர் அறிகிறார். ஆகையால் நாம் ஞானத்தையும் புத்தியையும் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொள்ள அவரிடம் திரும்பும்போது "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" அவைகளை நாம் பெற்றுக்கொள்வோம் (நீதி.2:6).

கடைசியாக யோபு சொல்லும்போது; "மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்" (யோபு28:28). ஆம், அன்பான வானொலி நேயர்களே, முதலாவது ஆண்டவருக்கு பயப்படும் பயம் உண்டாகவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம் என்கிறார் சாலொமோன் ஞானி. உலகத்தில் நடக்கிறவைகளை கர்த்தர் பாரார், கர்த்தர் கவனியார் என்று சொல்லாதே! அநேகர் தங்களுக்கு வந்த கஷ்டங்களை நினைத்து கர்த்தரை தூஷிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். யோபு என்ற தாசன் அனைத்தையும் இழந்தபோதும் பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை என்று காண்கிறோம். காதை உண்டாக்கினவர் கேளாரோ, கண்ணை உண்டாக்கினர் காணாரோ! சிந்தித்துப்பார். ஆண்டவருக்கு பயந்து பொல்லாப்பை விட்டு விலகு உனக்கு வேண்டிய ஞானத்தையும், புத்தியையும் கர்த்தர் ஏற்றவேளையில் கொடுத்து உன்னை ஆதரிப்பார். இஸ்ரவேலைக் காக்கிறவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை. கர்த்தர் சதா காலங்களிலும் நம்மோடிருக்கிறவர். அவர் உங்களுக்கு வேண்டிய ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவாராக!

**ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் எப்படிப்பட்டவன்?**

உலகத்தில் பணக்காரர்களை பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று உலகம் போற்றுகிறது. உண்மை அதுவல்ல. பணம் இருந்தால் எல்லாம் வந்துவிடும் என்பதல்ல. மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என வேதம் கேள்வி எழுப்புகிறது. ஜீவனுக்கு ஈடாக மனுஷன் என்னத்தைக்கொடுப்பான்? அதற்கு ஈடாக இயேசுவின் இரத்தத்தையல்லாமல் ஒன்றையும் கொடுக்கமுடியாது. மனுஷன் உலகத்தில் எதைவேண்டுமானாலும் சம்பாதித்துவிடலாம். ஆனால் ஞானத்தையும் புத்தியையும் சம்பாதிக்க ஆண்டவரிடம் செல்லவேண்டும். கர்த்தருக்குப் பயப்படும்போது இவைகளை பெற்றுக் கொள்ளமுடியும். அப்படியானால் கர்த்தரிடம் வராதவர்கள் எல்லாம் புத்திமான்கள் இல்லையா என்ற கேள்வி எழும்புகிறது. ஆம், உலகத்தில் உள்ள அனைத்தையும் புத்தியாய் சம்பாதித்தார்கள் ஆனால் அவைகள்



இந்தத் தாமதம் நிகழ்திருக்கிறது என்று தெரிகிறது.

**3. இயேசுவில் லாசருவின் மரணத்தின் தாக்கம் (11:33) இது இயேசுவானவரின் உணர்வுகளிலேயே மிகவும் பலமாக சொல்லப்பட்ட ஒன்று.**

அ) அவர் ஆவியிலே கலங்கினார். இரண்டு முறை அவர் ஆவியிலே கலங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (33,38) இது அவருடைய துக்கத்தையல்ல, கோபத்தையே குறிப்பிடுகிறது ஏன்?

1. மறுபடியும் மரிக்கவே லாசரு உயிருடன் எழுந்திருப்பான்.

2. மரித்தோரை எழுப்பக்கூடிய இயேசுவின் வல்லமையை சந்தேகித்ததால் இந்த கோபம் இருக்கலாம்.

3. மேலும் பாவத்தின் சம்பளம் மரணம் என்ற உண்மையினாலும் அதனால் வரும் வேதனையினாலும் இருக்கலாம். இயேசுவானவருக்கு மரணம் என்பது வெல்லக்கூடாத ஒன்றல்ல.

ஆ) அவர் அவர்கள் துயரத்தைக் குறித்து அழுதார்.

1. லாசருவின் அவனுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தாருடைய பாடுகளை நினைத்து துக்கப்பட்டார்.

2. நெருங்கிய நண்பனின் மரணம் மனிதர்களுக்கு உண்டாக்கும் துக்கம் தனக்கும் உண்டென்பதை இயேசுவானவர் பகிர்ந்து கொண்டார். இயேசு நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடியவர் (எபி.4:5)

**II. மக்களிடம் இருந்த விசுவாசம் எப்படிப்பட்டது.**

**அ) சீடர்கள்**

1. இயேசுவானவரின் பெத்தானியா பயணத்தைக் குறித்து குழப்பமடைந்தார்கள்.

2. நிச்சயமாகவே அது மரணமென்று எண்ணினார்கள். 10-ம் அதிகாரத்திலே எருசலேமிலுள்ள யூதர்கள் அவர் மீது கல்லெறிய முயன்றார்கள்.

3. அவன் மரித்திருந்தால் கிறிஸ்து செய்வதற்கு ஒன்றும் முடியாது. ஒருவேளை ஆழ்ந்த தூக்கத்திலிருந்தால் கிறிஸ்துவின் உதவி அவனுக்கு தேவையில்லை.

4. இருந்தபோதிலும் அவர்கள் அவரோடு சென்று மரிக்கத் தயாராயிருந்தார்கள் (11:16).

**ஆ) மரியாளும் மார்த்தாளும்**


1. முதலில் இயேசுவானவர் வர தாமதத்தினால் மனம் வருந்தினார்கள். இருவருமே ஒரே மாதிரியாய் நிந்தையான வார்த்தைகளைச் சொன்னார்கள் (11:21).

2. கிறிஸ்துவின் வல்லமையில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் அவருடைய வல்லமை மரணம் ஏற்படும் வரைதான் (11:21-22) அல்லது லாசருவை உயிருடன் எழுப்பமாட்டார் என்று நினைத்தார்கள்.

3. இறுதியான உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்திருந்தனர் ஆனால் இப்போதல்ல (11:24)

4. கல்லறையைத் திற என்று இயேசு கட்டளையிட்டபோது பயந்து அதிர்ச்சியடைந்தார்கள்.

**– தொடர்ச்சி அடுத்த இதழில்**




# துவாலையின் பாடம் -4

Lessons of the Towel *- Jerry Bates*

**இயேசுவின் உயிர்த்தெழுதலும், ஒளியுமானவர் - யோவான் 11:1-53**
**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. மனித பலவீனமாகிய மரணத்தை நாம் அனைவரும் சந்தர்ப்பத்தில் முகமுகமாய் சந்திக்கிறோம்.

2. வேதாகமத்தின் படி லாசரு உயிருடன் எழுப்பப்பட்டது ஒரு மாதிரியாகும். வேறு சிலரை மரித்தோரிலிருந்து இயேசுவானவர் உயிருடன் எழுப்பிய இரண்டு சந்தர்ப்பங்கள் பின்வருவன: (மாற்.5:41-42; லூக்.7:12-17).

3. கடைசியாக அவர் வெற்றிகரமாக எருசலேமுக்குள் சிலுவையில் அறையும்படி செல்வதற்கு முன் செய்த அற்புதம் இது. இந்த அற்புதம் இயேசுவின் ஊழியத்தில் மிக உச்சக்கட்டமாக நிகழ்த்தப்பட்ட ஒன்றாக சொல்லப்படுகிறது. இந்த அற்புதம் இயேசுவின் பகைஞர்கள் இருந்த இடத்தின் பின்புறத்தில் நடந்தது. இது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

4. அனைத்து அற்புதங்களின் நோக்கம் - மனிதர்களை விசுவாசத்தில் நடத்துவது (யோவான் 20:30,31)

5. இந்த அற்புதம் அவர் தன்னை யாரென்று அறிவித்தாரோ அதை உறுதி செய்தது.

அ) நானே ஜீவ அப்பம்: பின்பு அவர் 5000 பேரை போஷித்தார்.

ஆ. நானே ஒளி: பின்பு அவர் குருடனுக்கு பார்வையளித்தார்.

இ). நானே உயிர்த்தெழுதலும் ஜீவனும்: பின்பு அவர் லாசருவை உயிரோடு எழுப்பினார்.

## I. அற்புதங்கள் நிகழ்வதற்கான சூழல்

**1.பெத்தானியாவிலுள்ள ஒரு குடும்பம் இதில் சம்பந்தப்படுகிறது (11:1)**

அ) எருசலேமுக்கு கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ளது பெத்தானியா.

ஆ) இயேசுவானவரால் நேசிக்கப்பட்ட ஒரு குடும்பமானது (11:3,5,36)

1. லாசருவை இயேசு சிநேகிதனே என்று அழைக்கிறார்

2. இது இயேசுவின் குடும்பத்திற்கு தூரமாயிருந்த இன்னொரு குடும்பம் (லூக்.10:38-42)

3. இயேசுவானவருக்கும் விசேஷித்த நண்பர்கள் இருந்தார்கள்.

**2. இந்த சகோதரிகளுக்கு ஒரு பிரச்சனை அவர்களுடைய ஒரே சகோதரன் லாசரு மரணத்துக்கேதுவான வியாதியால் பிடிக்கப்பட்டிருந்தான்.**

அ) ஒரு முறை வியாதிப்பட்டதினாலே, இயேசு அவனை நேசிக்கவில்லை என்று அர்த்தமல்ல.

ஆ)இயேசுவானவர் ஆச்சரியமானதொன்றையும் செய்தார். அவர் தங்கியிருந்த இடத்திலேயே மேலும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டார்.

1) கவலையின்மையினால் அல்ல; லாசருவின் சகோதரிகளுக்கு அப்படித்தோன்றினாலும் கூட

2) அவன் மரித்துவிட்டான் என்பதை உறுதி செய்ய அல்ல. அவர் வந்தபின்பு லாசரு மரித்து நான்குநாளாகியிருந்ததை கணக்கிட்டால் அவன் மரிக்கும் முன்பு அவர் அங்கு வருவதற்கு வழியில்லை.

3. லாசரு மரித்தது உண்மையே என்பதை உறுதி செய்யும் பொருட்டே



எல்லாம் மாயையான காரியங்கள். மறைந்தேபோகும். நிலையான கர்த்தரையும், அவருடைய அழியாத வசனங்களையும் அவர்கள் பற்றிக்கொள்ளவில்லையே, ஆனபடியால் அவர்கள் புத்திமான்கள் அல்ல என்றே சொல்லவேண்டும். கர்த்தருடைய வசனம் சொல்கிறது; "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" என்று (நீதி.3:13). நீங்கள் ஞானத்தையும் புத்தியையும் கண்டடைந்து சம்பாதித்து விட்டீர்களாக? நாம் செய்தியில் தியானித்தோம். அவைகளை கர்த்தர் ஒருவரே அறிகிறார். அவருடைய வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவருக்குப் பயந்து நடக்கும்போது இவைகளைப் பெற்றுக்கொள்வோம். நீங்கள் பாக்கியவான்களாக மாற ஞானத்தையும் புத்தியையும் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### ஜெபியுங்கள்

- இம்மாதம் புதிதாக பதவி ஏற்றுள்ள நமது மாத இதழ் இணை ஆசிரியர்களுக்காக...
- 2014-ம் வருட ஊழியங்களுக்காக...
- இந்தியாவில் உள்ள கர்த்தருடைய சபைகளுக்காக...
- ஒவ்வொருவரும் இப்புத்தகத்தைப் பெற்று சத்தியத்தை அறிந்துகொள்ளவும், அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும்...
- கடைசி நாட்களில் அநேக தேவமனிதர்கள் எழும்பவும் சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்படவும்...
- கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் ஊழியர்களுடைய குடும்பங்களுக்காக...



# வாடாத கிரீடம் கிடைக்க

**உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து**

| | |
|---|---|
| கட்டாயமாய் அல்ல, | மனப்பூர்வமாய் |
| அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, | உற்சாக மனதோடு |
| சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல | மந்தைக்கு மாதிரிகளாக |

**கண்காணிப்புச் செய்யுங்கள்**

**1பேதுரு 5:2-4**

## மனிதன் 2002 ல் என்ன நடக்கும் என அறிய ஆவலுடனிருந்தான்

(Man wondered what would happen in 2002)

*J.C.Choate*



20ம் நூற்றாண்டு முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக பலர் என்ன நடைபெறப்போகிறது என அறிவதில் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். அதிகமான ஜனங்கள் மிகுந்த வியாகுலத்தோடு 2000 - மாவது ஆண்டை எதிர்நோக்கியிருப்பவர்களாகக் காணபட்டனர். இது நாம் வரலாற்றின் ஒரு பெரிய யுகத்தை முடித்து இன்னொரு யுகத்தை நாம் தொடக்குகின்றவர்களாக இருப்பது போல இருந்தது. அரசியலிலும் கூட, மனிதர்கள் தங்களுடைய தேசத்தை 21ம் நூற்றாண்டுக்குள் தலைமைதாங்கி நடத்தும் பதவிக்காக போராடினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, 20ம் நூற்றாண்டின் தொடக்கமும் உலகெங்குமுள்ள சமயக் குழுக்களுக்கு மிக முக்கியமான ஒரு நிகழச்சியாக காணப்பட்டது.

உண்மையாகவே, இது இப்படி நேரிட்டிருக்கையில் நூற்றாண்டு மற்றும் இயேசு இவ்வுலகை ஆண்டதாகக் கருதப்படும் ஆயிரம் ஆண்டு காலம் முடிவுற்ற எந்த ஆண்டு மற்றும் துவங்கிய இன்னொரு ஆண்டைக் காட்டிலும் எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டதாக இருக்கவில்லை ,குறிப்பாக கர்த்தரோடு இது பற்றி என்னபெரியவேறுபாடு இருக்கும்? பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம் “ (2பேது.3:8) என பேதுரு கூறியதை நினையுங்கள்.

2000- மாவது வருடத்தைப் பற்றிய விவகாரம் வரையில், கார்த்தருடைய பார்வையில் உலகம் உண்டானதிலிருந்து அனைத்து ஆண்டுகளைப் பற்றிய மனிதனுடைய கணக்கு சரியானதாக இருந்திருக்கிறது என நாம் எப்படி அறிந்தோம்?. இந்தக் கணக்கு அல்லது இரண்டு அல்லது நூறு அல்லது அதற்கு மேல், ஒரு வழி அல்லது இன்னொரு வழியினால் முடிவடைந்திருக்கக் கூடும்! ஆனால் எண்ணிக்கை இருந்தாலும் கூட, அந்தச் செயல் எந்த வேறுபாட்டை ஏற்படுத்தும்? ஒரு நாள் என்பது ஒரு நாளே, மற்றும் ஒரு வருடம் என்பது ஒரு வருடமே மேலும் காலச்சக்கரம் முழுவதிலும், 2000 மாவது ஆண்டு மற்றொரு ஆண்டைக் காட்டிலும் வித்தியாசமானதாகக் காணப்படவில்லை.

பலர் 2000- மாவது ஆண்டை வரவேற்கும் படிக்கு எருசலேமிலிருக்க விரும்பினார்கள் அவர்கள் ஏதோ விசேஷித்த நிகழ்ச்சி அங்கு நடக்கும் என நினைத்தார்கள். சிலர் கர்த்தர் எருசலேம் நகரத்தில் ஆயிரம் வருடம் ஆளுகையை தொடங்கும்படிக்கு வருவார் என உறுதியுடனிருந்தனர். வரப்போவதொன்றைக் குறித்து முன்கூட்டியறியச் செய்யும் தீவிரமான எல்லா சிந்தனையும் மற்றும் மனதில் ஏற்பட்ட ஊகத்தின் தீர்வு என்னவென்றால் கிறிஸ்து அந்த நாழிகையில் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேதியில் வருவதற்கு வாக்குப் பண்ணவில்லை! மாறாக, அவர், “ அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்” (மத். 24 :



ஒவ்வொரு பகுதியும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ச்சியுற்று சரியான நேரத்தில் மற்ற பகுதிகளோடு சார்ந்து நிலைநிறுத்தப்பட ஏதுவாகும்! இது அறியப்படாத, வெறுமையானவை பூர்த்திசெய்யப்பட அற்புதங்களின் வெடிப்பு நடைபெற்றது என்பது நம்புவதற்கு ஏதுவாக இருக்கிறதா? ஒன்றுமில்லாமையிலிருந்து சிலவற்றை உண்டாக்க முடிந்தது, **பிரதானமான ஒருவரில்லாமல் இது நடைபெறாது அல்லவா?**

இப்போர்பட்ட கருத்தை அறிவியலின் ‘அறியப்பட்ட விதி’ ஒவ்வொன்றையும் வெளிப்படையாகவே எதிர்க்கிறது, ஆனால் பரிணாமக் கொள்கையை ஆதரிக்க மக்கள் நல்லதொரு கருத்தை தெரிந்தெடுக்க சந்தேகத்தை எழுப்புகின்றனர். மேலும் அறிவியலற்ற கொள்கையானது நேர்மறையான காரணம் உண்டென கருதுவதற்கு மாறாக ஒவ்வொன்றிற்கும் பின் படைப்பினை விட ஒரு சக்தி மிகுந்த ஒன்று உள்ளது என்கின்றனர்: நாம் உயிருள்ள உன்னதமானவர் தேவன் எனக்கூறுகிறோம்.

**சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா -சங்கீதம் 150:6**

### நடப்புச் செய்திகள்

✦ நாட்டிலேயே முதன் முறையாக, மதுரை தலைமை தபால் நிலையங்களில் ‘ஆன் லைன்’ முறையில், பாஸ்போர்ட் விண்ணப்பப் பதிவு சேவை துவக்கப்பட்டது.

✦ பாரதிய மகிளா வங்கி நாடு முழுவதும் 4 மாதங்களில் 16 மகளிர் வங்கிகளைத் திறக்க திட்டமிட்டுள்ளதாக வங்கி இயக்குநர் உஷா அனந்தசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

✦ பீகாரில் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதிய 10,000-க்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தோல்வியடைந்தனர்.

✦ கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற சச்சின் ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) அமைப்பின் தெற்காசிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**வேத அறிவுப்போட்டி: 159 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. மீகா | - மீகா1:1 |
| 2. தெசலோனிக்கேய | - 2தெச.3:4 |
| 3. வறட்சியாக்குகிறார் | - நாகூம் 1:4 |
| 4. இமெனேயும்,அலெக்சந்தரும் | - 1தீமோ.1:20 |
| 5. ஆபகூக் | - ஆப.3:14 |
| 6. கன்னானாகிய அலெக்சந்தர் | - 2தீமோ.4:14 |
| 7. செப்பனியா | - செப்.3:8 |
| 8. கிரேத்தாதீவார் | - தீத்து 1:12 |
| 9. ஆகாய் | - ஆகா.2:16 |
| 10. பிலேமோனுக்கு | - பிலே.24 |

**வேத அறிவுப்போட்டி: 159-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 2. Ira. எதிராசன் | - சங்கரி |
| 3. Miss. கிப்ட்ராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 4. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 5. R. எமிமாள்ரவிகுமார் | - ஒட்டநத்தம் |
| 6. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 7. E. கார்த்திக்ராஜா | - மதுரை |
| 8. Sis. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 9. Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 10. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 11. Mrs. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 12. S. ரவிச்சந்திரன் | - வேலூர் |
| 13. R. ஜோஸ்வா செல்வகுமார் | - சிவகாசி |
| 14. R. ஜானிபெபெயாள் | - சிவகாசி |
| 15. R. ஸ்டெல்லாஇளமதி | - தாராபுரம் |

**பொய்யை பகைத்து அருவருக்கிறேன்;
உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்
சங்கீதம் 119:163**

அமைப்புகளிலும், இதன் ஆண்/மற்றும்/பெண் ஜோடிகள், **வாழ்க்கை- இல்லா** நிலையிலிருந்து **வாழ்க்கை** நிலைக்கு தாவுதலும், மேலும் பரிணாமம் பல லட்சம் ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற ஒன்றுக்கொன்று சார்புற்ற அமைப்புகளும் என்ற நம்பிக்கையையே நாம் இன்றுவரை பார்க்கிறோம். ஆனால் யாராவது உண்மையிலேயே **வெளிப்படையான** - பரிணாம (ஒரு வாழ்க்கை அமைப்பிலிருந்து இன்னொரு வாழ்க்கை அமைப்பிற்கு மாறுகின்ற) மாற்றத்தைக் கண்டிருக்கிறீர்களா? அறிவியல் இம்மாற்றம் நடைபெற முடியுமென **நிரூபித்திருக்கிறதா?** இல்லை, "பரிணாமம்" இதனுடைய முழு நம்பிக்கையின் பாகம் மற்றும் கொள்கைகள் வெறுமனே ஒரு நாத்திக மதமாகவும், அறிவியல் என்ற பெயரின் அடிப்படையில் பகட்டாக காண்பிக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. இதை நம்புகிறவர்கள், தெரிந்துகொள்ளுதலின்படியும் விசுவாசத்தின்படியும் அதுவே உண்மையென்று நம்புகின்றனர். ஏனென்றால் இதன் அஸ்திபாரம் நிரூபிக்கப்படாத, அதேசமயம் பரிகாசத்திற்கேதுவான கேலிகூத்தாகவும், "சமயத்தின்" அடிப்படையிலில்லாமல், ஆனால் வளர்ந்து வருகிற அறிவியலின் அடிப்படையிலே இவ்வாறு உள்ளது.

அதிகமான மக்கள் "பரிணாமக் கொள்கையை" ஆதரித்து "பெரிய ஓசை" யை நோக்கி (பூதக்கண்ணாடியில் பார்க்கக்கூடிய சிறிய பொருளைவிட மிகச் சிறிய பொருளை முன்னதாகவே அழுத்த முடியும் என்ற கருத்தோடு இன்று நாம் பார்க்கும் பிரபஞ்சத்தில் வெடிக்கச் செய்யும் பொருளை) அல்லது பிரபஞ்சத்திலுள்ள மிகப்பெரிய துகள் எப்படி உருவானது என்று விளக்கமளிக்கும் நோக்கத்தில் "பரிணாம கொள்கையை" ஆதரிக்கின்றனர். அவர்கள் ஆரம்பிக்கும் சில காரியங்களிலிருந்து வரும் பதில்களே வேறு கேள்விகளை உருவாக்குகிறது என்பது ஒரே ஒரு பிரச்சனையாயிருக்கிறது. அந்த சில காரியங்கள் எங்கிருந்து வந்தது? யார் அல்லது எது அதை உருவாக்கிற்று? அல்லது அக்காரியம் நித்தியமானவையா? அது எப்போது ஜீவிக்கின்றவையா?

இக்கேள்விகளுக்கு இப்போது இக்கொள்கை பதிலளிக்கிறது. முழுபிரபஞ்சமும் ஜீவனுள்ளவற்றிலிருந்து ஒரு நேர்த்தியான வெற்றிடத்தில் இயற்கையாக உருவானது என்று ஆழ்ந்து சிந்தித்து கற்றறிந்த அறிவியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்! அவர்கள் கூற்று சரியானதா? வெறுமையிலிருந்து ஒவ்வொன்றும் உருவானது என்பது உண்மைதானா? மேலும் வேறு எந்த வெளித்தோற்றத்திலிருந்தும் உருவாகவில்லை என்பது உண்மை தானா?

இதை சோதித்து பார்க்க முயற்சி செய்யுங்கள். நேர்த்தியான ஒரு வெறுமையானது உருவாயிருந்தது, உலகத்தின் வெளிப்பகுதியிலிருந்து முத்திரையிடப்பட்டிருந்தது, ஒரு கிருமி, ஒரு பாக்ட்டீரியா அல்லது எந்த ஒரு மிகச்சிறிய ஒரு பொருள் உலகினுள் இருக்கவில்லை. பிறகு கவனியுங்கள் நேர்த்தியான வெறுமையான இடத்தை வெடிக்கச் செய்ய எவ்வளவு நாட்கள் ஆகும் - எந்த ஒரு காரணமுமில்லை - உருண்டையான பிரபஞ்சத்திற்குள் - நேர்த்தியான சமநிலை மேலும் சிக்கலான ஒழுங்கின்மையானதாகவும் இருந்தது. அப்போதுதான்



36) என கூறியிருந்தார். இப்போது, கிறிஸ்து எப்போது வருவார் என்பதை பிதா ஒருவர் மாத்திரம் அறிந்திருக்கிறபோது, எவ்வாறு உங்களுக்கும் அல்லது எனக்கும் அல்லது வேறொருவருக்கும் அந்த நாளை ஊகித்துப் பார்க்க இயலக் கூடியதாக இருக்கும்? மேலும் கிறிஸ்து 2000 - மாவது ஆண்டில் மீண்டும் வருவார் என்று நமக்கும் உறுதியாக நினைத்துக் கொள்ள எவ்வாறு இயலும்? அவர் அந்த நாளுக்கு முன்பு அல்லது அந்த நாளுக்குப் பின்பு வர இயலும், ஆனால் ஒரு மனிதனும் அதன் எவ்வழியையும் அறிந்திருக்கமாட்டான். இப்படிப்பட்ட காரியம் தேவனுடைய கரங்களில் உள்ளது மேலும் நாம் அவைகளை அவ்விடமே விட்டு விட வேண்டும்.

கர்த்தர் நீதியுள்ள 1000 வருட ஆட்சி செய்யும்படிக்கு எருசலேமுக்கு மீண்டும் வருகிறார் என்பதைப் பற்றிய வினாவானது பரிகாசத்திற்குரியதாகும். வேதாகமம் எவ்விடத்திலும் இவ்வாறான கோட்பாட்டினை போதிக்கிறதில்லை. இயேசு மீண்டும் பூமிக்கு ஏன் வரப்போகிறார்? அவர் ஒரு முறை பூமிக்கு வந்து, புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர் ஏன் மீண்டும் வரவேண்டும்? வருவதற்கான நோக்கம் என்ன? கிறிஸ்து பரலோகத்திலுள்ள பிதாவினிடத்திற்கு எழுந்தருளிப் போனபோது, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் என்பதாக வேதம் கூறுகிறது (அப்.1:11). அவர்கள் அவர் எப்போதாவது வந்து மீண்டும் பூமியின் மேல் ஆளுகையை நிலைநாட்டுவார் என்று சொல்லவில்லை. குறிப்பாக பவுல், கர்த்தர் வரும்போதும், நாம் அவரை சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்!என்று குறிப்பிட்டிருக்கிறார் (1 தெச. 4:16,17). இது ''பரவசத்தில்'' அல்லது எருசலேமில் ஒரு மாம்ச பிரகாரமான ராஜ்யத்தில் ஆயிரவருட ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர்களால் வர்ணிக்கப்பட்ட ஒரு காட்சியல்லவா!

இத்தோடு கூட பலர் "Y2K" (2000 மாவது ஆண்டு) யின் மேல் செய்யும்படிக்கு ஒரு பெரிய பிரச்சனையை உருவாக்கி, அனைத்து கம்ப்யூட்டர்களும் செயலிழந்து போகும் மேலும் உலகில் ஒவ்வொரு இயந்திர சாதனத்தின் மூலம் தேவையான பாதுகாக்கப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஸ்தம்பித்துவிடும் என்ற பயத்தை உருவாக்கி கொண்டிருந்தார்கள் நாம் கம்ப்யூட்டர் பிரச்சனைகள் சரியாக பழைய ஒழுங்கு நிலைக்கு மீண்டும் திரும்பும் வரை 2000- மாவது ஆண்டு தொடக்கத்திற்கென தண்ணீரையும், உணவையும், பணத்தையும் சேமித்து வைக்கும்படி ஊக்குவிக்கப்பட்டோம். சிலர் அந்த நாளை பற்றி எதிர்பார்த்திருந்த விபரீதம் ஏற்கனவே சரியாக்கப்பட்டன எனக் கூறி, அந்த பயத்தினை போக்கினார்கள்.

எப்படியாயினும், 21 ம் நூற்றாண்டின் முக்கியகாரியம், என்னவென்றால் காலம் நிறைவேறும் முன்னே, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து. கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்படையும் படிக்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும், அவரிடத்தில் நம்பிக்கையுடனிருப்பதுமே ஆகும். அப்போது தான் அவர் மீண்டும் வரும்போது அவரை சந்திக்க நாம் ஆயத்தமாயிருப்போம்..... அந்த நாழிகை எப்போதாகவும் இருக்கலாம். ( எபி. 11:6; யோவா. 14:1-3; மாற். 16:16;அப்.2:38 -47; வெளி.2:10).

# மரியாள்

A.Kanakaraj
Associate Editor



பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளே, மரியாள். இவளிடத்தில் ஏசாயா தீர்க்கதரிசி முன்னமே சொல்லியபடி அவள் கன்னியாயிருக்கும்போது இயேசுகிறிஸ்து பிறந்தார் (ஏசா.7:14). அதன்பின்பு இயேசுவுக்கு சகோதர சகோதரிகள் இருந்ததாக நாம் சுவிசேஷ புத்தகங்களில் படிக்கிறோம். அவர்கள் யாக்கோபு, யோசே, சீமோன் யூதா போன்றோர் (மத்.13:55,6). ஆனால் மரியாளை கன்னி என சொல்லிக்கொண்டு இன்றைக்கு மரியாளுக்கு பல்வேறுபெயர்களை வைத்து வணங்குகிறார்கள். ஆனால் வேதவசனத்தின்படி அவள் வாழ்த்துதலுக்கு மட்டுமே உரியவள், அவள் வணக்கத்திற்கும் தொழுதுகொள்வதற்கும் உரியவள் அல்ல.

புதிய ஏற்பாட்டு வேதத்தில் நாம் அநேக மரியாள்களைக்குறித்துப் படிக்கிறோம். மகதலேனா மரியாள் (லூக்.8:2), யோசேயின் தாயாகிய மரியாள் (மாற்.15:40), மார்த்தாள் சகோதரி மரியாள் (லூக்.10:38),யோவானின் தாய் மரியாள் (அப்.12:12), இன்னும் அநேகர்.

இன்றைக்கு கத்தோலிக்க மார்க்கத்தினர் அடைக்கல மாதா, ஆரோக்கிய மாதா, சகாய மாதா, அமலோப்ப மாதா, மேரி மாதா, என்று அழைக்கிறார்களே புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட எந்த மாதாவை இப்படி அழைக்கிறார்கள். எந்த ஒரு இடத்திலும் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிறாத சுய கற்பனைகளை வைத்து மரியாளுக்கு பலபெயர்களைவைத்து அழைக்கிறார்கள். மேலும் உலக அளவில் 168 விதவிதமான மாதா சொருபங்களை வைத்திருக்கிறார்கள். இதை பூண்டிமாதாகேவிலில் விற்பனையும் செய்கிறார்கள். "எனக்கொப்பாக யாதொரு சொருபத்தையாவது விக்கிரகத்தையாவது உனக்கு உண்டாக்கவே வேண்டாம்" என வேதம் போதிக்கிறது. இப்படியிருக்க இவர்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஒருவரே நமக்கு இரட்சகர். "அவர் நாமமே அல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவில்லை" (அப்.4:12). மேலும், தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே அவரே இயேசு (1தீமோ.2;5). "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் இயேசு (யோவான் 14:6). நித்திய ஜீவனுக்கு போகிற வாசல் இயேசு நாமம் மட்டுமே (மத்.7:14; யோவா.6:68,69). அவருடைய வசனம் காலத்திற்கேற்ப மாறாது ஏனென்றால் அவர் மாறாதவர் (எபி.13:8).

கிறிஸ்தவ மார்க்கத்திற்கு இயேசு ஒருவரே அஸ்திபாரம் (1கொரி.3:11). இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவரும் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவரே அல்பா, ஓமேகா, ஆதியும் அந்தமுமானவர் (வெளி.1:8). ஆகையால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து வீணாக மரியாளை வணங்கி தேவ கோபத்திற்கு உள்ளாகாதிருங்கள். அந்த மரியாளே அவர் (இயேசு) என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள் என்று கானா ஊர் கலியான வீட்டில் சொன்ன காரியத்தை மறந்து விட்டீர்களா! அன்பானவர்களே "தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்" என கர்த்தர் விரும்புகிறார். அவ்விதமாக தொழுதுகொள்ளுகிறவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். மற்றபடி மரியாள் வணக்கத்தை அவர் ஏற்றுக்கொள்ளார். ஆகையால் மரியாள் தொழுதுகொண்டு வந்த தேவனைத் தொழுதுகொண்டு கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.



தேவனின் தொடர் உயிர்வாழ்வினைப் பற்றிய மாறுபட்ட கருத்துடைய இக்கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறோம். நீங்கள் எப்போதாவது ஏன் என்று மனித எண்ணித்தின் எதிரில் உள்ள திகைக்க வைக்கும் எல்லா கேள்விகளையும் குறித்து ஆச்சரியமடைந்திருக்கிறீர்களா? தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கும் மக்கள் அடிக்கடி மூடநம்பிக்கையுள்ளவர்கள் போலவும் கல்லாதவர்கள் போலவும் இருக்கின்றனர். எனவே, அநேக அறிவியல் மற்றம் கல்வியறிவு சார்ந்த உலகத்தால் இக்கால அறிவும் ஆவிக்குரியவற்றைப் பரிகாசப்படுத்துவதும் தேவனைப் பற்றிய எண்ணம் ஏன் முழுவதுமாக அலட்சியம் செய்யப்பட்டதாயிருக்கவில்லையா?

கடந்தகால வரலாற்று மற்றும் தொல் பொருள் ஆராய்ச்சி பதிவேட்டிற்கு உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், அப்போது **நீங்கள் மனித வாழ்வின் மையப்பகுதியில் தேவனைக் கண்டுபிடிப்பீர்கள்:** தேவனை ஆராதிப்பதும், தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பதும், மரணத்தை எதிர்நோக்குதலும்; தேவனுடைய எதிர்பார்ப்பையும் கூட நீங்கள் கண்டுகொள்வீர்கள். இன்றைக்கும் கூட மனிதவர்க்கம் இரண்டு பெரிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஏதோ, ஒருவகையில் தேவனை ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்வை கழிப்பவர்கள் என்றும் தேவன் உயிரோடிருக்கிறார் என்பதை மறுதலித்து, அவர் மனிதனுடைய எண்ணத்தில் ஒரு பொய்யான நிர்மானம் மட்டுமே என்று நிரூபிக்க முயற்சிப்பவர்களாக தங்கள் வாழ்வை கழிக்கிறவர்கள் என்றும் இருபெரும் குழுக்களாக இருக்கின்றனர் ஆனால் - ஏற்றுக்கொள்வதில் அல்லது மறுதலிப்பதில் - ஒவ்வொரு கலாச்சாரத்தின், ஒவ்வொரு காலத்தின், உலகமுழுவதிலும் தேவன் - மையப்பொருளாகக் கருதப்பட்டவராயிருக்கிறார்.

மக்கள் தங்கள் வாழ்வின் அலுவலில் உண்மையாகவே மறுதலித்து, தவறென நிரூபித்து தேவனுடைய தொடர் ஜீவியத்தை பொய்யென நிரூபித்து, கட்டுக்கதையை விட மேலானவர் என அவரை பிரகடணம் செய்வது வஞ்சகப்புகழ்சியல்லவா - இது வெளிப்படுத்தப்படுகின்றதா? என்கின்றனர். இல்லாத வேறொருவருடைய வாழ்வினை "பொய்யென நிரூக்கும்" முயற்சியில் யாரோ ஒருவர் தன் வாழ்வினைக் கழித்துக்கொண்டிருக்கிறாரென எப்போதாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நம்மிடம் ஏதோ ஒன்றை பற்றி சொல்லமுடியாதா?

## "அறிவுபெருத்த" ஒரு மதசார்பற்ற உலகில் தேவனை மறுதலித்தல்

நிச்சயமாக, இன்று இவ்வுலகில் அநேகர் தேவனுடைய மற்றும் சமயக் கருத்துக்களை அவமதிக்கின்றனர். அவர்கள் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதவர்க்கம் பிற்காலத்தில் "ஒரு கடவுள்" மற்றும் முடவன் நடக்கப் பன்படுத்தும் கவையுள்ள கொம்பைப்போல "சமயத்தை" சிறிது சிறிதாக அறிவித்தான் என பிரகடணப்படுத்துகிறார்கள். அவர்கள் உயிரினம் அறிவியலால் கொடுக்கப்பட்டது என்று எல்லா பதில்களும் எல்லா கேள்விகளுக்கும் எல்லாப் பொருட்களுடன் சம்பந்தமுடையதாயிருக்கிறது என்கின்றனர். ஆனால் தாமதிக்கவும்! எவ்வகையிலும் இது என்ன "பரிணாமக் கொள்கை"? இது எல்லாவற்றிலும் வித்தியாசமுடையதும் குழப்பத்தின்

பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God? *-Betty*




### பாடம் -1

### தேவன் ஒருவர் இருக்கிறாரா?

### Is There a God?

தேவன் ஒருவர் இருக்கிறாரா? இந்தக் கேள்வியை எப்போதாவது நீங்கள் உங்களுக்குள் கேட்டிருக்கிறீர்களா? இக்கேள்வியை உண்மையாகவே கேட்டிருந்தால், தேவனில் ஆழமான விசுவாசம் கொண்டுள்ள ஒவ்வொரு மனித ஆன்மா; முழுவதும் தேவனை மறுதலிக்கிற மனிதன், மற்றும் அநேகக் கடவுள்கள் மேல் நம்பிக்கை வைத்திருக்கிற மனிதன் நாமெல்லாரும் இந்தக் கேள்வியோடு மல்லுக்கட்டி நம்முடைய சுயஅறிவில் ஏதோ ஒரு வகையான முடிவிற்கு வந்திருப்போம்.

நாம் வாழ்கிற இந்த சமயசார்பற்ற உலகில், அநேகர் தேவனைப் பற்றிய இக்கேள்வியை ஒரு முக்கியமற்ற அலமாரியில் அடுக்கிவைக்கப்பட்ட புத்தகத்தைப்போலவே தங்கள் மனதில் "நான் மிகவும் அலுவலிலிருப்பதால் இப்படிப்பட்ட அனைத்திலும் இப்போது தலையிட முடியாது" எனக் கூறும் மனப்பாங்குள்ளவர்களாயிருக்கலாம். "நான் குழந்தையாய் இருந்தபோது போதிக்கப்பட்டவற்றிலேயே நம்பிக்கையுள்ளவராகயிருப்பேன்" அல்லது "நான் எனக்காக படித்து முடிக்க நேரமிருக்கும்வரை அறிவியல் அறிஞர்களின் வார்த்தையைப் பின்பற்றுவேன்" என்று சொல்லலாம்.

மற்றவர்கள், ஆழமான படிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பயத்தினால், தங்கள் வாழ்நாள் முழுவதும் அவர்கள் நம்பியிருந்த நம்பிக்கையை ஆய்வு செய்ய தயங்குகிறவர்களாகவுமிருக்கின்றனர். மேலும், தங்களின் "ஆறுதலின் இடம்" எதுவோ அதைப் பின்பற்றுகின்றனர். என்னுடைய குடும்ப அங்கத்தினர்களும் நெருங்கிய நண்பர்களும் கிறிஸ்தவர்களாக அல்லது இந்துக்களாக அல்லது இஸ்லாமியராக அல்லது நாத்திகர்களாக இருப்பார்களென்றால், படிக்கின்ற எண்ணங்களும் அன்பிற்குரிய ஒவ்வொருவருடைய முடிவுகளும் தவறான பீதி உண்டாக்குகின்றவையாக இருக்கும். இப்படிப்பட்ட கற்றலுக்கு ஊக்கமளிக்கப் போதுமானவை எவையேனும் இருக்கிறதா? முடிவிலே, போதுமான பலத்தோடு தனியாக நிற்க, தேவை ஏற்பட்டால், ஒருவருடைய திடநம்பிக்கையின் மேல் அஸ்திபாரம் போட்டவர்களாயிருக்க ஏதேனும் உண்டா?

**ஜீவனில் அல்லது மரணத்தில், இக்கேள்வி ஒவ்வொரு ஆத்துமாவினால், நிச்சயமாகப் பதிலளிக்கக்கூடியவையாக இருக்கிறது**



பெண்கள் பகுதி

# அதிகமாய்க் கொடுக்கப்படும்

## *More Will be Given*

*- Glory Arjunan*




புத்தாண்டை எதிர் நோக்கிக் காத்திருக்கும் அன்பு சகோதரிகளே, இதை வாசிக்கும் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய ஆயுசு நாட்கள் கடந்து ஓடுகின்றன. ஒருநாள் பிறப்பதை நீ அறியாயே என்ற வசனத்திற்கேற்ப நாளை என்பது நம் கையில் இல்லை. பிரசங்கி சாலொமோன் கூறுவதைப் போல் எல்லாம் மாயையே! இந்த மாயையான வாழ்க்கையிலும் நம்மை உண்டாக்கின தேவன் எப்போதும் நம்மேல் இரக்கமும், உருக்கமும் உள்ளவராக பரிபூரண ஆசீர்வாதத்தைக் கொடுக்கச் சித்தமுள்ளவராக இருக்கிறார். ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரவான்களா யிருக்கிறோமா என்று நம்மை சோதித்துப் பார்ப்பது அவசியம்!

தேவன் ஒவ்வொருவரையும் வெறுமனே படைக்கவில்லை. ஒவ்வொருவரையும் தனித்திறன்மிக்கவராகவே படைத்துள்ளார். தனித் தனியே நமக்கென்று கொடுக்கப்பட்டுள்ள அந்த திறமைகள் அல்லது தாலந்துகளை நாம் எப்படி பயன்படுத்தினோம் இனிமேலும் எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்பதைப் பற்றி ஆராய்வது வரவிருக்கும் புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கப்போகும் நமக்குப் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன்.

"அதிகமாக கொடுக்கப்படும்" என்றால் அது என்ன? எது அதிகமாக கொடுக்கப்படும்? ஆசீர்வாதமா அல்லது ஆசீர்வாதமில்லாதவையா? மத்தேயு 25-ம் அதிகாரத்தில் பரலோகராஜ்யத்தை பல உவமைகளோடு ஒப்பிட்டு இயேசுகிறிஸ்து விளக்கமளிக்கிறார். அதில் வசனம் 14 முதல் 30 வரை தூரதேசமாய் புறப்பட்டுப் போகிற ஒரு எஜமானைப் பற்றியும் அவனுடைய ஊழியக்காரர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவ்வசனங்களில் அந்த எஜமான் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், இன்னொருவனுக்கு இரண்டு தாலந்தும் மற்றொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டு செல்லுகிறான். தூர தேசத்திற்கு பிரயாணமாய் சென்ற அந்த எஜமான் "வெகுகாலமானபின்பு திரும்பி வந்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான் அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன் வேறு ஐந்து தாலத்தைக் கொண்டு வந்து, ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே, அவைகளைக்கொண்டு இதோ, வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே

உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்" (மத்.25:19-21). இவ்விதமாகவே இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து; ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத்.25:22-23). ஆனால் ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன் ஆகையால் நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்" (மத்.25:24-25).

அன்பு சகோதரிகளே இந்த உவமையிலிருந்து நீங்கள் என்ன அறிந்துகொள்ளுகிறீர்கள்? தேவன் உங்களுக்கென கொடுத்த தாலந்துகளை அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று பயன்படுத்தி அதை பெருக்குகிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது தேவ நாமத்தை தூஷித்துக் கொண்டு; ஒன்றுமே செய்யாமல் சோம்பேறியாக வாழ்ந்து கொண்டு, எப்போது பார்த்தாலும் தேவன் எனக்கு இதைச் செய்யவில்லை, அதைச்செய்யவில்லை, ஆசீர்வாதம் என்பதே என் வாழ்க்கையில் கிடையாது என்ற சொல்லிகொண்டு ஒன்றுமே முயற்சிக்காமல் தேவனுடைய நாமத்தை அறிவிக்காமல் தேவன் உங்களுக்குக் கொடுத்த தாலந்தை புதைத்து வைத்திருக்கிறீர்களா? இன்றே மனந்திரும்பி வரும் புதிய ஆண்டிலிருந்தாவது தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி உங்கள் தாலந்தை பயன்படுத்துங்கள் அப்படிப் பயன்படுத்த தீர்மானிப்பீர்களானால் ஐந்து தாலந்துள்ளவன் பெற்ற ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

அந்த எஜமான் ஒரு தாலந்தை வாங்கி அதை பயன்படுத்தாமல் புதைத்து வைத்திருந்தவனிடமிருந்து அதை வாங்கி பத்து தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" என்றார் (மத்.25:29). ஆம் அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாய் கொடுக்கப்பட்டது. உள்ளவன் எவனோ அவன் உண்மையும் உத்தமுமாய் ஜீவிக்கும்போது இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இல்லாததவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இக்கூற்று ஒருவேளை உங்கள் பார்வையில் இல்லது உலகத்தார் பார்வையில் அநியாயமாகக் காணப்படலாம். உமையும், நியாயமும் இது தான் பிரியமானவர்களே! ஸ்திரீகளாகிய நமக்கோ உலகப்பொருட்களின் மேல் கொள்ளை ஆசை. அதை வாங்கவேண்டும், இதை வாங்கவேண்டும், அவர்கள் வைத்திருப்பது மிக அழகாய் இருக்கிறது. அதைப் போல் நமக்கும் ஒன்ற வேண்டுமென அடுக்கிக் கொண்டே போகிறவர்கள் அநேகர். நவீன உலகில் பல



நவீனங்கள் கண்களின் இச்சையைத்தூண்டி, இச்சைகளுக்குட்படுத்துகின்றன. எனவே நாம் சிலவேளைகளில் இப்படியாக நினைக்கிறோம். இல்லாதவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்வது பாவமா? அவனிடத் உள்ளதை எடுத்துக்கொள்ளலாமா? என்றெல்லாம் நினைத்து உள்ளவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனுக்கு ஏன் இன்னும் அதிகமாய்க் கொடுக்கப்படுகிறது என நினைக்கிறோம். அன்பு சகோதரிகளே, வசனம் ஒருபோதும் தவறிழைக்காது. அது ஏழுதரம் புடமிட்டவைக்கும் மேலானது. அதிகமாக சாம்பாதிக்க அல்லது முயற்சி எடுத்து, உழைக்க நினைக்கும் ஒவ்வொருவருக்கும் அதிகமாய்த்தான் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் பரிபூரணமும் அடைவார்கள்.

ஆம், சகோதரிகளே, இப்புத்தாண்டிலாவது நம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தேவனால் நமக்கென்று கொடுக்கப்பட்ட தாலந்துகளை புதைத்து வைக்காமல் பயன்படுத்தி பெருக்கிக் காட்டுவோம். வருகின்ற புத்தாண்டில் பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவோம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக!

## ஆசிரியர் கடிதம்

வாசகர் அனைவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ்வருடம் முழுவதும் நம்மை சுகத்தோடும், பெலத்தோடும் பாதுகாத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். வருகின்ற 2014-ம் ஆண்டு தேவனுடைய கரத்தினால் ஆசீர்வதிக்கப்படவும், அந்த ஆண்டு முழுவதும் நிங்கள் கர்த்தருடைய நன்மைகளை காணவும், அவருடைய நாமத்தினாலே பெரிய காரியங்களைச் செய்யவும் கர்த்தர் உங்களை எடுத்துப் பயன்படுத்துவாராக!

நீங்கள் வேதவாசிப்பிலும், சபைகூடுகையிலும், கர்த்தருடைய சகல காரியங்களிலும் உற்சாகமாக கலந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்துங்கள்.

நமது மாத இதழ் தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அநேகர் கூடி இந்த மாத இதழக்காக ஜெபிக்கிறார்கள். சிலர் தனிப்பட்ட விதத்தில் ஜெபிக்கிறீர்கள். அதற்காக நம் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

"திரளான ஜங்கள் புறப்பட்டுவந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்" என்ற ஏசாயா 2:3-ம் வசனத்தின்படி கர்த்தருடைய சபையை அநேகர் அடையாளம் கண்டுகொண்டு இரட்சிக்கப்பட ஜெபிக்கிறோம். நமது இதழை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

**2014-ம் வருடத்தை காண இருக்கும்**
**வாசகர் அனைவருக்கும்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்! - ஆசிரியர்**